# மனிதனாக மண்ணில்.



மனிதனாக மண்ணில் பிறந்த ஸ்ரீராமனே ,

புனிதன் உன்னில் சிறந்தவர் எவருண்டு !

மனிதனாக......

பெற்ற தந்தைகொடுத்த வரமதைகாக்க,

சுற்றம் மறந்து நீயும் கானகம் சென்று ;

பெற்ற துயரங்கள் பல, பலவுண்டு - இந்நிலை ,

கொற்றவனே உனக்கேன் நான் அறியேன் !

மனிதனாக....

ஒருத்தியே ஒருவனுக்குத் தாரமென்று ,

கருத்தில் என்றும் எல்லா மனிதர்களும் ;

இருத்திட வேண்டும் என்பதனையும் - நிலை ,

நிறுத்திட நீயும் வாழ்ந்து காட்டினையே !

மனிதனாக....

அம்பினால் அண்ணன் வாலியையும் ,

மறைந்திருந்து நீயுமன்று கொன்றது ;

தம்பியின் தாரத்தை எவனொருவனும் - நிலை ,

மறந்தும் கவர்ந்திடக் கூடாதென்றா !

மனிதனாக....